RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22211

OPEN ACCESS

# தமிழகத்தில் வழிபாட்டு மரபுகளும் பெண் தெய்வங்களின் தாக்கமும்

க. ஹறிநாத் [அ, *], தி. பார்த்திபன் [அ]

[அ] மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா

# Worship Traditions and the Influence of Goddesses in Tamil Nadu

K. Harinath [a, *], T. Parthiban [a]

[a] Department of Philosophy, Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India

* Corresponding Author: aummtrusthari@gmail.com

Received: 22.09.2022
Revised: 08-11-2022
Accepted: 15-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

In the social tradition of Tamil Nadu, early human beings worshipped nature and the five elements of nature, fire, rain, air, space, and earth. As an extension of this, ancestor worship, also known as worshipping the Dead, has existed in the folk tradition since time immemorial. Continuously divided into Minor Deities and Great Deities, many social groups have been worshipping in order to maintain the social restrictions of their lives. The impact of worship from the Pre-Sangam era to the present, the modulation, the characteristics of goddesses, and its consequences, explain future trends.

**Keywords:** Nature Worship, National Tradition, Worship of Goddesses, Manipulation

## முன்னுரை

தமிழகத்தின் வழிபாட்டு முறைமைகளில் முக்காலங்களிலும் இவற்றின் தாக்கங்கள் மற்றும் பரிமாணங்களை விளக்கும் விதமாகவும் இவற்றில் பெண் தெய்வங்களின் வழிபாட்டு தாக்கத்தினையும் அது குறித்த எதிர்கால போக்குகளையும் பதிவு செய்வதாகவும் இக்கட்டுரை ஆய்வு விளக்குகிறது. குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட முறையில் வழிபடுவது என்பது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக கருதப்படும் பொருட்களையும், நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாகும். இது மிகவும் தொன்மையான மனித குலத்தின் தனிப்பட்ட பண்பாக இருந்து வந்துள்ளது. கிறிஸ்து பிறப்பின் தொடக்கத்தில் விந்திய மலைப்பகுதியில் பெரும்பாலான இடங்களில் ஏராளமான எச்சங்கள் சான்றுகளாகவும் பழமையானதாகவும் உள்ளன. இந்த எச்சங்கள் இறப்பு சடங்கு அல்லது மூதாதையர் வழிபாடு இவற்றைச் சார்ந்ததாகும். இதுவே பண்பாட்டை சிறப்புடன் கூறுகிறது.

## நடுகல் வழிபாடு

நடுகல் வழிபாடு என்பது பண்பாட்டுச் சிறப்பை போற்றுவதாகும். கற்களால் ஆன நடுகல் வழிபாட்டு முறையானது, இறந்த வீரனின் சிறப்பை போற்றுவதாகும். இந்த நடுகல் வழிபாட்டு மரபு கிமு முதல் நூற்றாண்டு அல்லது கிபி முதல் நூற்றாண்டு அளவில் தோன்றி பின்வந்த காலகட்டங்களில் வரையறுத்த வடிவம் ஆகிறது.

## மரங்கள் வழிபாடு

மரங்களை வழிபடக்கூடிய முறை ஒரு காலத்தில் மிகவும் பரவலாக இருந்து வந்துள்ளது. மரங்கள் கடவுளர்களும் ஆவிகளும் உறையும் இருப்பிடமாக கருதி மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். ஆல், அரசு, இரட்டி, இலஞ்சி, கடம்பு, பலா, வாகை, வன்னி, வேம்பு, வேங்கை போன்ற மரங்கள் வழிபாட்டுக்குரியதாக இருந்துள்ளன. கடம்ப மரம் முருகனுக்கு உரியதாகவும் ஆலமரம் சிவனுக்கு உரியதாகும் ஆலமரத்தைச் சுற்றி செங்களால் ஆன அமைப்பு இருந்ததையும் அம்மரத்திற்கு படையல் வைத்து வழிபட்டதையும் பண்டைய தமிழ் இலக்கணமான அகநானூறு கூறுகிறது (Srinivasan, 2011).

## வழிபாட்டில் பண்பேற்றம்

முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பெரும் கற்கால மக்களின் வழக்கில் இருந்த வழிபாட்டின் நீட்சி சங்க காலத்திலும் காணப்பட்டது. இங்கு சங்க காலம் எனப்படுவது கிமு 600 முதல் கிபி 100 வரை ஆகும். தொல்லியல் காலம், இலக்கிய காலம், மானிடவியல் காலம் இந்த மூன்று காலங்களிலும் மனித குல வரலாற்றில் மூன்று விதமான பரிமாணங்களை அறிய முடிகிறது. இவற்றை இணைத்தறிதல் மூலமாக சங்க காலத்துக்கு முன்பு வழக்கில் இருந்த கடவுள், தெய்வம் வழிபாடு சங்க காலத்திலும் காணப்படுகிறது. அணங்கு, சூர் ஆகிய தெய்வங்கள் குதித்து, குதித்து ஆடக்கூடிய வகையாகவும் ஆவேசம் கொண்டதாகவும் "முருகு மெய்ப்பட்ட புலைத்தி போல தாவுபு தெறிக்கும் ஆன் "என்கிறது புறநானூறு (259 :5-6). சூர் தீண்டபட்டவர்கள் நடுங்குவார்கள் என்கிறது குறுந்தொகை (52:2)." சூர் உறு மஞ்ஞையின் நடுங்க" என்கிறது குறிஞ்சிப்பாட்டு (169). பண்டைய தமிழர் உருவமற்ற ஆற்றல்களை வணங்கி பின்பு அவற்றிற்கு மனித பண்பேற்றம் செய்ததை அறிய முடிகிறது. காளி என்னும் திராவிட சொல் மூலத்தை கருப்பு என்னும் பொருளுடைய கார் என்பதில் இருந்து திரிந்தது கால். இங்கு கருப்பு என்பது அச்சத்தின் குறியீடாகவும் குழப்பம், பயங்கரம், முடிவற்றது, புரியாத புதிர் என்ற பொருண்மையும் உண்டு. இதற்கு இணையான ஆண்பால் காலம் ஆகும். காலன் இறப்புக்குரிய தெய்வம் ஆகும். கால் என்றால் காற்று, அசைவு என்ற பொருள்கள் உண்டு. தொல்குடியினர் இடி, மின்னலோடு காற்றின் விசையான ஆற்றலை புரிந்து கொள்ள முடியாமல் புதிதாக உணர்ந்திருக்கக் கூடலாம். இதனால் காத்து கருப்பு என்பது கூட மிகவும் புழக்கத்தில் உள்ளது. காற்று தொடர்புடைய தீய ஆய்வுகளை குறிப்பதாக உள்ளது. இதுவே பின்னாளில் பெண்பால் சார்ந்த அம்மன் என்னும் விகுதியுடன் இணைந்து காளியம்மன் என்று ஆகியது. தெய்வத்திற்கு இணையான ஆண் தெய்வங்கள் வழக்கு பெறவில்லை. எச்சங்களாக காளியப்பன், காளியண்ணன் என்னும் ஆண்பால் இயற்பெயர்கள் உண்டாகின. காளி போன்று நாகம் என்னும் விலங்கினை பழந்தமிழ் குலத்தினர் வழிபடத் தொடங்கி அதுவே மனிதப் பண்பேற்றம், உருவேற்றலால் தாய்த் தெய்வமாக்கப்பட்டபோது நாகம்மன் என்னும் அம்மன் தெய்வம் ஆகியது. நாகராஜா, நாகப்பன் போன்ற ஆண்பால் இயற்பெயர்களும் தோன்றின.

## மாரி என்கின்ற மழை தெய்வம்

மாரி என்கின்ற சொல் மழையைக் குறிக்கிறது. ஆதியில் மழையை, இயற்கையை வழிபட்டதாகவே அமைந்தது பெண்பாலாக ஆதியில் கருதவில்லை மனித உருவேற்றத்தினால் மாரியாயி, மாரியம்மன் என்று தாய்த் தெய்வங்களின் ஆளுமை விரிந்தது. இவ்வாறு இயற்கை ஆற்றலை வழிபட்டு வந்த தொல் தமிழர்கள் பின்னாளில் பழையோளை எனப்படும் மூதாதையர், வீரர்கள் ஆகியோரின் ஆற்றலை வழிப்பட தொடங்கிய போது பால்சார நிலையில் இருந்தது பின்னர் பால் சார்பில் மனிதப் பண்பேற்றமும் மனித உருவேற்றமும் நடந்தன (Bhakthavachala Bharathi, 2020).

## வழிபாட்டில் பாகுபாடுகள்

ஆரம்ப காலத்தில் கலைகளுக்கும், விஞ்ஞானத்திற்கும் உலக நாகரிகத்தில் மந்திரங்கள் மூலமாக இருந்தது என்பதை சமூகவியல் அறிஞர்கள் ஜார்ஜ் தாம்சன், பிரேசர் ஆகியோர் விளக்கமாக

கூறியுள்ளனர். தனிமனித கடவுள் உறவு என்பது மதங்கள் உருவான பின் வந்ததாகும். இது பரிணாமம் என்ற விஞ்ஞானக் கொள்கைக்கு எதிரானதாக உள்ளது.

ஆதிகாலத்தில் உணவு தேவைக்காக மக்கள் கூட்டம் அச்சத்துடனும், ஆச்சரிய உணர்வோடும் இயற்கையை வணங்கி வந்தனர். கால ஓட்டத்தில் ஒவ்வொரு சமூகத்தின் தேவை, வளர்ச்சிகள் மாறும்பொழுது அதற்கு ஏற்ப கதைகளும் புராணங்களும் வளர்ந்தன. இதன் நீட்சியாக அரசுகள் உருவாகி வளர்ந்த போது ஆள்பவர்கள், ஆளப்படக் கூடியவர்கள் என்ற நிலையில் தெய்வங்களும் பெரு தெய்வங்கள், சிறு தெய்வங்கள் என்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. குணங்களும் தெய்வத்தின் வடிவமும் அவை சார்ந்த சமூகத்தின் தேவையை ஒட்டி அமைந்ததாக இருந்துள்ளன.

## மாடுகள், உழவர்களின் தெய்வங்கள்

கால்நடை வளர்ப்போர் தெய்வம் மாடுகள் கன்றுகள் சூழ்ந்தபடி கையில் புல்லாங்குழல் தான் இருக்க முடியும். உழவர்களின் தெய்வம் மழை தருகின்ற இந்திரனாகவோ அல்லது கையிலே கலப்பை பற்றிய பலராமனாகத்தான் இருக்க முடியும் என்று ஒரு குறிப்பிட்ட சடங்கு மனப்பான்மையுடன் இனக்குழுக்களாக மக்கள் வாழ்வியல் அமைந்திருக்கிறது (Paramasivan, 2006).

பலராமருக்கு வெள்ளை நிறம் உடையவன், பெருங்குடியன், கலப்பையை ஆயுதமாக கொண்டவன், பனைக் கொடியினை உடையவன், ஒரு கையில் உலக்கை உடையவன் என்ற சிறப்புக்கள் உண்டு. இவன் ஒரு முறை ஒரு மரத்தடியில் நீராடுவதற்காக சாய்ந்த வண்ணம் யமுனையை தன்னிடம் வருமாறு அழைக்கிறான். அவள் வராது போகவே தன் கலப்பைக் கொண்டு அவளை தன் இருப்பிடத்திற்கு இழுத்து நீராடுகிறான். இவனுக்கு ஹலாயுதன் என்ற பெயர் உண்டு. ஹலம் என்றால் வடமொழியில் கலப்பை என பொருள்படும். திருமா லிருஞ்சோலையில் நேமியும் கலப்பையும் பொழிந்து நிற்பதாக பரிபாடலில் (15) இளம் பெருவழுதியார் பாடுகிறார். மாமல்லபுரத்தில் கிருஷ்ண மண்டபத்தில் கிருஷ்ணன், பலராமன், நப்பின்னை ஆகிய மூவரும் இணைந்து நிற்கும் ஒரு சிற்பம் உள்ளது. இது தமிழ்நாட்டில் பலராம வழிபாடு நிகழ்ந்ததற்கு சிறப்பச்சான்றாக அமைந்துள்ளது. இன்று தமிழகத்தில் பலராம வழிபாட்டின் எச்சமாக வெள்ளையன், வெள்ளைச்சாமி, வெள்ளைகண்ணு என்ற பெயர்கள் பாண்டிய நாட்டில் அழைக்கப்படுகிறது. கருப்பு நிற சாமி ஆகிய கண்ணனிடம் இருந்து வேறுபடுத்தவும், கண்ணனின் அண்ணன் என்ற தொடர்பை காட்டவும் வெள்ளை கண்ணு, வெள்ளைச்சாமி என்ற பெயர்கள் பயன்படுகின்றன. இவற்றைப் போலவே மதுரை பகுதியில் உலக்கையின், மூதுலக்கையன் என்ற வழங்கும் பெயர்கள் பலராமனையே குறிக்கிறது (Paramasivan, 2014)

கிமு ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய சாந்தோக்கிய உபநிடதத்தில் கிருஷ்ணரை பற்றிய பூர்வீக கதைகளின் அம்சத்தை மீண்டும் காண்கின்றோம். ஆரிய மொழியில் கிருஷ்ணா என்ற சொல்லிற்கு கருப்பு என்ற பொருள் உண்டு. சிந்து வெளியில் கிருஷ்ணருக்கு கருமை நிறக்கடவுள் என்று பொருள்படும் பெயர் இருப்பதாக நம்பப்படுகிறது. கிமு ஐந்தாம் நூற்றாண்டிலேயே பாணினி இலக்கணத்தில் யாதவர் குலத்தில் உதித்த வசுதேவன் மகனான வாசுதேவனும் அர்ஜுனனும் வணக்கத்திற்குரிய வீரர்களாக திகழ்ந்ததை விளக்குகிறது. இந்த வாசுதேவனே கிருஷ்ணன் என்பது பண்டைய மரபு ஆகும். சங்கர் சன என்றால் உழவன் என்று பொருள் உண்டு. விவசாயத்தில் விவசாய தெய்வமாக அவன் விளங்கினான் என்றும் உழவுக்கருவியான கலப்பையை படையாக உரியவனே பலராமன் என்று போற்றப்படுகிறார். முதலில் நாகர் தெய்வமாக திகழ்ந்ததாலே பல நாகர்குலங்களை ஏற்றுக் கொண்டதால் பலராமன் ஆதிசேஷன் அவதாரமாகவும் பரப்பப்பட்டிருக்கிறான். இதன் மூலம் பல்வேறு தாய்வழி குடிகள் தந்தை வழி சமுதாயத்தில் கிருஷ்ண வழிபாட்டை தழுவியதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளதை நாம் அறியலாம். நாராயணனை வழிபடும் கொள்கைக்கு பாஞ்சராத்திரம் என்று பெயர் வந்தது. வாசுதேவனை வழிபட்டவரை பாகவதர் என்றும் விஷ்ணு, நாராயணன், வாசுதேவ கிருஷ்ணன் என்ற மூவரும் ஒருவரே என்ற கொள்கை தோன்றிய பின் பாஞ்சராத்திரியரும், பாகவதரும் வைணவர் ஆயினர் (Ramakrishnan, 2011).

## உள்ளூர் கடவுளுக்கும் சிவ விஷ்ணுவிற்கும் உள்ள வேறுபாடு

தமிழ்நாட்டில் கிராம தேவதை வழிபாட்டிற்கும், பிராமணிய செல்வாக்கு உள்ள விஷ்ணு, சிவ வழிபாட்டிற்கும் உள்ள வேறுபாடுகளை எளிதாக அறியலாம். கிராம தெய்வங்கள் நோய் மற்றும் பிற அழிவுகளைப் போக்கக்கூடிய அல்லது உருவாக்கக்கூடிய உள்ளூர் கடவுள்கள் ஆகும். இவை அனைத்தும் ஒட்டு மொத்த உலகத்துடன் எந்தவித உறவோ, ஆதாயத்திற்கோ, தேவைகளுக்கோ மற்றும் சுற்றுப்புறத்திற்கு அப்பால் செல்லாத சிந்தனை கொண்ட நாகரீகமற்ற அறியாமையில் உள்ள மக்களின் மதமாகவே தோன்றுகிறது. இவர்களது வழிபாட்டு முறையில் அதிக அளவில் உடலினை வருத்தக்கூடிய, பாவம், கருணை இவைகளை நீக்கியதாக பூசாரிகளும், பூஜை முறைகளும் அமைந்துள்ளன. பூசாரி ஒருவர் ஆட்டுக்குடலை மாலையாக கழுத்தில் போடுவது, எருமையை பலி தருவது மற்றும் மது அருந்திய நிலை, கடினமான வேண்டுதல் நிறைவேற்றுதல் போன்ற செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. சிவ, விஷ்ணு வழிபாட்டில் பிரபஞ்சத்தில் செயல்படும் மாபெரும் ஆற்றலான அழிவு மற்றும் ஆக்கத்திற்கான தத்துவார்த்த கருத்தாக்கங்களும், கிராம தெய்வ வழிபாட்டில் பிராமணர்கள் பங்கெடுத்துக் கொண்டதாகவும் இயல்பாகவே ஒருவருக்கு ஒருவர் வழிபாட்டு முறைகளை பரிமாறிக் கொண்டதையும் அறிய முடிகிறது.

## வழிபாட்டில் தாழ்த்தப்பட்ட ஜாதியினர் பங்களிப்பு

பரமசிவன் தொ 1979 இல் நிகழ்த்திய கள ஆய்வில் மதுரை மாவட்டம் அழகர் கோயிலில் சித்திரை திருவிழாவின் போது தீட்டு என கருதப்படுவோர், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதியினர் தோலால் செய்த பைகளில் கொண்டு வரும் நீரை உலா வரக்கூடிய இறைவனின் திருமேனியின் மீது பீச்சி அடிக்கின்றனர். மிகப்பெரிய எரிகின்ற திரியினை இறைவன் முன் வைத்து சாமியாடுகின்றனர். இங்கு பள்ளர், பறையர், சேர்வை, சந்தனக் குறவர், சக்கிலியர் உட்பட அனைத்து ஜாதியினரும் கலந்து கொண்டு வழிபடுகின்றனர். கோயம்புத்தூர் காரமடை ரங்கநாதர் கோவிலில் மாசி மாதம் பௌர்ணமி அன்று நடைபெறக்கூடிய தேரோட்டத் திருவிழாவில் இருளர், பறையர், மாதாரி தாசப்பலஞ்சுக செட்டியார் ஆகிய ஜாதியினர்கள் பெருவாரியாக கலந்து கொண்டு சாமியாடிகள் கவாளம் எனப்படும் பழங்களை சர்க்கரை வெல்லத்துடன் சேர்ந்து பிசைந்த உருண்டையை உண்டு சிறப்பிக்கின்றனர்.

## பெண் தெய்வங்களின் தாக்கம்

### கொற்றவை

கொற்றவை என்ற சொல், கொற்றம் என்ற வேர்ச்சொல்லை அடியொட்டியதாக இருந்து பிறந்திருக்கலாம். கொற்றம் + அவ்வை-கொற்றவை எனப் பிரித்து வெற்றியை உடையதாக பொருள் கூறலாம். மேலைநாட்டு அறிஞர்கள் ஜெல்டுனர் Fraudes waldes என்று ரிக் வேத நூலின் வழியாக காடுகளை கூறுகிறார். அறிஞர் மேக்டோனால் Vedic Mythology என்ற நூலின் வழியாக பாலை நில தெய்வத்தினை ஆளுகின்ற பெண் தெய்வமாக கூறுகின்றார். காடுகளையும், பாலை நிலத்தினையும் ஆளக்கூடிய பெண் தெய்வமாக கொற்றவை கருதப்படுகின்றாள். இதனுடைய நீட்சியாக தென்னிந்தியாவின் கேரளாவில் பாலக்காடு என்ற ஊர் உள்ளது. இது தமிழில் பாலைக்காடு என்று அமைந்து மருவிய நிலையில் பாலக்காடு ஆகியதாக டெய்கில் கூறுகிறார்.

## சக்தி வழிப்பாடு

சாக்த ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கடவுளால் கூறப்பட்டதாக நம்பப்படுகின்றது. வேத சடங்குகள் நீக்கப்படும் பொழுது சக்தி வழிபாட்டினுடைய ஆகமங்கள் தோன்றின என டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன் கருதுகின்றார். சாக்த

ஆகமங்கள் மொத்தம் 77 உள்ளன. இவற்றில் வசிட்டம், சனகம், சுகம், சனாதனம், சனத்குமாரம் என்ற ஐந்தும் சுப ஆகமங்களாகும். இவை ஞானத்திற்கும், வீடு பேற்றிற்கும் உரிய வழிகளை கூறுகிறது.

சாக்தர்களின் கொள்கைப்படி உலகம் சக்தி மயமானது. சிவம் சக்தியுடன் சேராவிடில் எத்தொழிலும் நடக்காது என்பது சாக்த சமயக் கொள்கையாகும். முதன்முதலாக சக்தியை அதாவது உமா ஹேமாவதியை பரம்பொருளாக கூறுவது கேன உபநிடதம். அதன் பிறகு பிருகத் தாரணியாக உபநிடதத்தில் ஒன்றாக இருக்கும் பரப்பிரம்மம், தான் படைக்கும் விருப்பம் கொண்டதனால் அதற்கான ஈட்சணமே அதனுடைய ஆக்கும் சக்தியாகின்றது என்று கூறுகின்றது. சிவன் அறிவாக கருதப்பட்டால் சக்தி அதனை ஆக்குகின்ற ஆற்றலாக இருக்கிறாள். சக்தியின் ஆணைக்கு உட்பட்டு நான்முகன் படைக்கின்றான். திருமால் காக்கின்றார். உருத்திரன் அழிக்கின்றார். எனவே சக்தி மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்டவளாக கருதப்படுகின்றாள் என்று டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன் கருதுகிறார். உலகை ஆட்டி படைக்கின்ற ஆற்றலாக இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்ற மூன்று சக்தியின் கூறுகளாக கருதப்படுகின்றன. இந்த மூன்று சக்திகளை சிவபெருமானின் முக்கண்களாக தீக்ஷாவதி, காரணகமம் என்னும் சைவ நூல்கள் கூறுகின்றது. அன்பிற்கும் அதன் கிளைகளாக வரக்கூடிய உணர்ச்சிகள் அனைத்திற்கும் பிறப்பிடமாக இச்சா சக்தி இருக்கின்றது. கேடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கும் பொழுது ஞான சக்தி மற்றும் நல்வினை ஊக்கத்தைப் பெற்று இயல்பாக அமையப் பெற்றுள்ளது. கிரியா சக்தி என்று உணர வேண்டும். சக்தியை பற்றிய ஞானம் வீடுபேற்றிற்க்கு அடிப்படையாக அமைகின்றது. பக்தி ஒன்றே சக்தியை அடைவதற்கு துணை செய்கின்றது. சப்த வடிவமாகவும் சக்தி இருக்கின்றாள் அதனால் சக்தி மந்திரங்கள் புனிதமாக கருதப்படுகின்றன. தியான வழி ஆறு சக்கர ஆதாரங்களுக்கும் குண்டலினி சக்தியை கொண்டு செல்வதற்கு சக்தி ஆதாரமாக இருக்கின்றாள் என்று இந்திய தத்துவம் என்ற நூல் கூறுகின்றது. நிலைக்களமான இறைவனின் வெளித்தோற்றமாக அமைகின்ற சக்தியானது சத்துவ குணத்தை அடைந்தால் காப்பாற்றும் சக்தியாகவும், ராசகுணத்தை அடைந்தால் ஜீவராசிகளை படைக்கும் சக்தியாகவும், தாமத குணத்தை அடைந்தால் அழிக்கும் சக்தி எனவும் அழைக்கப்படுகின்றது. சுவாமி சித்பவானந்தர் கருத்துப்படி சக்தி அல்லது மாயையானது நெருப்பினில் அமைந்துள்ள வெப்பம் போன்று என்றும் பிரியாது, எப்பொழுதும் அழியாதது நிலைத்து நிற்கும் பரம்பொருளை சார்ந்து இருக்கும் ஆற்றல் ஆகும்.

## சுமைதாங்கி கற்கள்

சுமைதாங்கி கற்கள் அமைக்கும் வழக்கம் விஜயநகர ஆட்சி காலத்திலும், நாயக்கர் ஆட்சி காலத்திலும் பெருகி இருப்பதாக தெரிகிறது. இந்த சுமைதாங்கி கற்கள் பேறுக்காலத்தில் இறந்த கர்ப்பிணிப் பெண்களின் நினைவாக வைக்கப்பட்டுள்ளன. சுமைதாங்கி கற்களின் வடிவத்தை எடுத்துக் கொண்டால் நான்கு அல்லது ஐந்து அடி உயரமுள்ள அகலமான நெட்டுக்குத்தான இரண்டு கற்பலகைகள் நிறுத்தப்பட்டு இருக்கும். நாட்டார் மரபில் மகப்பேறு பெண்ணை தொட்டுப் பிடித்த இரண்டு பெண் உதவியாளர்களை இது குறிக்கிறது. நெட்டுக்குத்தான இரண்டு கற்களின் மேல் கிடைவசமாக அமைக்கப்பட்ட கற்பலகையை இறந்த மகப்பேற்று பெண்ணின் நினைவாக அமைக்கப்படுகிறது. இன்றும் தமிழகத்தில் சுமைதாங்கி கற்களின் மேல் சுமைகளை வைத்து மக்கள் களைப்பு நீங்கி செல்கின்றனர். நாட்டார் மரபில் இவ்வாறு சுமங்கலியாக இருந்த பெண்களை மாலையம்மன், வாழ வந்தால், சேலைக்காரி ஆகிய பெயர்களால் வணங்குகின்றனர்.

## வழிபாட்டு மரபில் உண்டான தொழில்கள்

கோயில் பண்பாடு வளர்ந்த போது வேளாண்மை பொருளாதாரம் கோயிலோடு இணைக்கப்பட்டது. இதன் நீட்சமாக சில உற்பத்தி சாதிகளை கோயில்களின் அதிகாரம் மையம் சேவை சாதிகளாக மாற்றியது வரலாற்று நிகழ்வாக உள்ளது. துணைக் கருவிகள் செய்தல், இசைக்கருவிகள், உழவுக்கருவிகளை பழுது நீக்குதல், முடி திருத்துதல், சலவை செய்தல் என்பன போன்ற புதிய சேவை பொருள்களும் அவற்றுக்கான சேவை ஜாதிகளும் உருவாக்கப்பட்டன. மருத்துவராகவும் தோலாலான இசை கருவிகள் செய்பவராகவும், பழுது நீக்குபவராகவும் மற்றும் உழவு தொழிலாளியாகவும் இருந்த

பறையர் சாதியர் கோயிலோடு பிணைக்கப்பட்டனர். கால்நடைகளை மேய்க்கக்கூடிய இடையர்கள் கோயில் குளத்திற்கு நெய் கொடுப்பதற்காக கோவிலுக்குரிய ஆடுகளையும் மாடுகளையும் பேணக்கூடிய ஜாதியினராக கோயிலோடு இணைக்கப்பட்டனர் இவர்கள் சேவைக்கு கூலியோ மானியமோ கிடையாது. அந்த வேலை வெட்டி வேலையாகும். கல்வெட்டுகளில் வெட்டிக் குடிகள் என அழைக்கப்பட்ட வெட்டுக்குடி இடையன் என்ற சொற்றொடர் தமிழ் கல்வெட்டுகளில் பரவலாக காணப்படுகிறது. சேவை ஜாதிகள் ஆண்டு மானியமாக நெல்லையும் பிற தானியங்களையும் கூலியாக பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கு தரப்பட்ட மானியம் துடவை எனப்பட்டது. சுடுகாட்டிலும் இடுகாட்டிலும் சேவை செய்யக்கூடிய வெட்டியான் என்ற பெயருடைய பணியாளருக்கு உடனுக்குடன் ஊதியம் தரப்படுவதில்லை. ஆண்டு ஊதியமாக தான் பணி செய்யும் குடிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அதேபோல தானிய அறுவடை காலங்களில் பாட்டு பாடும் வானவர்களுக்கு அந்த ஒரு பொழுதில் தரப்படும் தானியமே அந்த ஆண்டு முழுவதுக்குமான ஊதியம் ஆகும். மன்னர்களிடம் நிரந்தர குடியிருப்பு வசதியும் நஞ்சை நிலங்களின் மேலாதிக்க உரிமையும் சமூக அதிகாரத்தையும் ஆன்மீக அதிகாரத்தையும் கோயில் நிர்வாகத்தையும் கையில் எடுத்துக் கொண்டவர்கள் புரோகிதத்தில் சேவை சாதியராக இருந்தனர். இவர்கள் கோயிலுக்கு உள்ளாக மட்டுமே பணி செய்யக்கூடியவர்கள் இவர்களில் பார்ப்பன புரோகிதர்கள், பார்ப்பன உதவியாளர்கள், மடைப்பள்ளி பணியாளர், இசைக்காரர்கள் ஆகியோருக்கு நாள்தோறும் சோற்றுக்கட்டி இணையும் ஊதியமாக பெற்றனர். திருவிழா காலங்களில் மட்டும் அந்த உரிமையை மற்றவர்கள் பெற்றனர்.

## இக்கால பெண் தெய்வங்களின் வழிபாடு

### ஸ்ரீ ஆஞ்சநேயர் அஞ்சனாதேவி

இதுவரை நமக்கு கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் தமிழகத்தின் தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு வட்டத்தில் கடமடை ரயில்வே கேட்டில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் தனது தாயார் அஞ்சனாதேவி உடன் காட்சி தருகிறார். தாயாருடன் சேர்ந்து அருள் பாலித்துக் கொண்டு இருப்பது தமிழகத்தில் இங்கு மட்டுமே.

### வழிபாட்டில் பெண்களின் பங்களிப்பு

1980 களுக்குப் பிறகு சென்னைக்கு அருகாமையில் உள்ள மேல்மருவத்தூரில் ஸ்ரீ பங்காரு அடிகளார் அவர்களால் நிறுவப்பெற்ற ஆதிபராசக்தி சித்தர் பீடம், கடவுளுக்கும் பக்தர்களுக்கு நடுவில் பூசாரி என்ற கட்டமைப்பை தகர்த்து புரட்சிகரமாக கடவுளை தொட்டு எந்த ஒரு பெண்ணும் தனியாக பூஜை செய்ய முடியும் என்றும், பெண்கள் மாதவிடாய் காலத்திலும் பூஜை செய்யலாம் என்ற வழிமுறையையும் ஏற்படுத்தி பெண்களின் வாழ்வியல் விழுமியத்தையும், தன்னம்பிக்கையையும் தமிழகத்தில் உறுதி செய்துள்ளனர்.

### குப்பைத்தொட்டி

நாட்டார் மரபில் தமக்கு குழந்தை பிறக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளும் தம்பதியர்கள் குழந்தை பிறந்த பின்பு, குப்பை தொட்டியில் குழந்தையை வைத்து வேண்டுதல் நிறைவேற்றுகின்றனர். அந்த குழந்தைக்கு குப்பன், குப்பம்மாள், குப்புசாமி என்ற பெயர்களை வைக்கின்றனர்.

### மாட்டு வைத்தியர்

தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், பண்ணந்தூர் கிராமம் அருகில் இருமத்தூர் தென்பெண்ணை ஆற்றின் மேம்பாலம் இணைப்பு சாலைக்கு அருகாமையில் செவிட்டு ராமசாமி கோவில் உள்ளது. ராமசாமி என்கின்ற மாட்டு வைத்தியர் நினைவாக இது அமையப்பெற்றது. இன்றும் உழவர் திருநாளில் அந்தப் பகுதியை சார்ந்த பெருந்திரளான மக்கள் மாடுகளுடன் வந்து வழிபட்டு செல்கின்றனர். ஏனென்றால் அவர் வாழ்ந்த காலத்தில் தீர்க்க இயலாத மாடுகளுக்கான எந்த

வியாதிக்கும் சில பச்சிலை மருந்துகள் மற்றும் அவருடைய தொடுகை வைத்தியம் மூலம் குணப்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது.

## முடிவுரை

இயற்கையை கருத்தில் எடுத்துக் கொள்ளும் போது இன்றளவும் தலவிருட்சமாக மரங்கள் வழிபாட்டில் உள்ளது. கிமு இரண்டாம் நூற்றாண்டில் சமணர்கள் தமிழகத்தில் ஊரின் ஒதுக்குப்புறமாக உள்ள மலைப்பகுதிகளில் மருத்துவ உதவிகள், வழிபாட்டு முறைகளை பரப்பி உள்ளனர். இவற்றின் எச்சங்களாக சமணப் படுக்கைகள் தமிழகத்தின் காஞ்சிபுரம் உள்ளிட்ட பல மலைகளில் இன்றும் உள்ளன. இன்று ஆறு வகை வழிபாட்டு முறைகள் அதாவது சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் தமிழகத்தில் வழிபாட்டு முறைகளாக உள்ளன. இவற்றில் சூரியனை வணங்கக்கூடிய சௌர அமைப்பினரின் தாக்கம் மிகக் குறைவாக உள்ளன. காண பத்தியம் என்பது கணபதி வழிபாடாகும். இவரை விநாயகர், கணேசர் என்றும் அழைப்பர். பெண் தெய்வங்களின் வழிபாட்டிற்கு அடுத்த நிலையில் தமிழகத்தில் எங்கும் அதிகமாக வழிபாட்டிற்கு உரிய கடவுளாக ஸ்ரீ விநாயகர் உள்ளார். இன்றும் தமிழக வழிபாட்டு முறைகளில் கௌமாரம் எனப்படும் முருகர் எங்கும் நின்ற நிலையில் காட்சி தருகிறார். சைவ வழிபாட்டில் சிவன் உட்கார்ந்த நிலையில் காட்சி தருகிறார். பெரும்பாலான இடங்களில் லிங்க குறியீடாக சிவன் காட்சி தருகிறார். வைணவ வழிபாட்டில் திருமால் எனப்படும் விஷ்ணு படுத்த நிலை அதாவது சயன நிலையில் காட்சி தருகிறார். சில இடங்களில் நின்ற நிலையிலும் காட்சி தருகிறார். ஆனால் பெண் தெய்வங்களின் வழிபாட்டில் மட்டுமே நின்ற நிலை, உட்கார்ந்த நிலை, படுத்த நிலை அதாவது சயன நிலை இவை மூன்றிலும் தமிழகத்தில் இன்றும் வழிபாட்டு மரபுகள் அனைத்து தரப்பு மக்களிடத்திலும் உள்ளன. இதனை நிலை ஆற்றல், செயலாற்றல் என்பதன் குறியீடாக புரிதல் வேண்டும். அதேபோல் சாக்தம் எனப்படும் சக்தி வழிபாடு அதாவது சிறு தெய்வங்கள், பெரு தெய்வங்கள் என பல பெண் தெய்வங்களின் வழிபாட்டுத் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து இன்று மிக அதிகப்படியான மக்கள் வணங்குவது பெண் தெய்வங்களின் வழிபாடாக உள்ளன. இங்கு நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவை 1100 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்ட சோழ மன்னர்களின் குலதெய்வம் நிசம்ப சூதனி என்ற பெண் தெய்வ வழிபாட்டு முறையாகும். இதன் மூலம் தமிழகத்தின் பெரும்பாலானோர் வழிபாடுகளில் பெண் தெய்வங்களின் ஆதிக்கம் இருப்பதை அறிகிறோம். இதன் மூலம் தமிழகத்தில் வரும் காலத்திலும் பெண் தெய்வங்களின் வழிபாடு தற்போது உள்ளதைப் போலவே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அறிகிறோம். ஏனென்றால் நெகிழ்வுத் தன்மையையும் பண்பேற்றத்தையும் காலத்திற்கு தகுந்தவாறு அனுமதிப்பதால் சாத்தியமாகிறது என்று ஆய்வை நிறைவு செய்கிறேன்.

## References

Bhakthavachala Bharathi, (2020) Pandai Thamizh Panbadu, Adayalam Publication, Trichy, India

Paramasivan, T. (2006) Theivangalum Samuga Marabukalum, New Century Book House, Chennai, India

Paramasivan, T. (2014) Panpattu Asaivugal, Kalachuvadu Publications, Nagercoil, India

Ramakrishnan, S. (2011) Samaya Valvil Vadakum Therkum, New Century Book House, Chennai, India

Srinivasan, K.R. (2011) Thenindhiya Kovilkal, National Book Trust, New Delhi, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License